# மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு விருது

சென்னை, மார்ச் 1: இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு பிஸ்ட் விருது வழங்கப்பட்டது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப்பணிகள் இந்தியாவின் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் மதிப்புமிக்க பிஸ்ட் விருதுகளை பெற்றுள்ளது. பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் அவசரகால உதவித்துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் அசாதாரண பங்களிப்பை இந்த விருது அங்கீகரிக்கிறது.

கடந்த மாதம் 27ம் தேதி புதுடெல்லி கிரேட்டர் நொய்டாவில் நடந்த பிஸ்ட் 2020 விருது விழாவின் போது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதிக்கான சிறந்த இந்திய திறன்கள் மற்றும் திறமை விருதுகள் 2020 விருது பெற்றது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிறுவன இயக்குனர் (திட்டங்கள்) ராஜீவ் நாராயணன் திவேதி விருதை பெற்றுக்கொண்டார். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.